# இடம் பொருள் கலைஞர்

104

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி!**



# சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி!

## கவனம் பெற்ற கட்டமைப்புப் பணிகள்

‘ஒன்றிய அரசை நோக்கி என்ன உரிமையைக் கேட்கிறோமோ, உள்ளூர் நிர்வாகத்திற்கும் அத்தகைய உரிமைகளை மாநில அரசு தர வேண்டும்’ என்னும் பரந்துபட்ட பார்வையைக் கொண்டிருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதனால்தான் உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்தார். அதுமட்டுமல்ல, ஒவ்வொரு தொகுதியின் தேவையை, கோட்டையில் இருந்து மட்டுமே தீர்க்க வேண்டுமென்பதும் ஏற்புடையதன்று. கல்வி-சுகாதாரம் - அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சார்ந்து, பராமரிப்பு மற்றும் புதிய கட்டுமானங்களை மேற்கொள்ள உள்ளூர் அளவிலே, சட்டமன்ற உறுப்பினரே முடிவு எடுக்கலாம், அதற்கான நிதியை அரசு தரும் என்ற அதிகாரப் பரவலாக்கத்திற்கான முயற்சியாக முத்தமிழறிஞர் கலைஞர் முன்னெடுத்ததே ‘சட்டமன்ற உறுப்பினருக்கான தொகுதி மேம்பாட்டு நிதி’.

“ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தமது தொகுதியில் செயல்படுத்த விரும்பும் பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்” என்று 1997-1998-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் கலைஞர் இதற்கான அறிவிப்பை முதன்முதலில் வெளியிட்டார். ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### திட்டம் செயல்படும் விதம்

சட்டமன்றத் தொகுதிகளில் தேவைப்படும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளைக் கண்டறிந்து, அவற்றைச் செயல்படுத்துவதற்காக, சட்டமன்ற உறுப்பினர் இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப் பரிந்துரை செய்வார். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. திட்ட செயலாக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, ஆண்டுதோறும் அரசாணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

திட்டத்தில் முறைகேடுகள் நடந்து விடக்கூடாது என்பதற்காக, திட்டத்திற்கான நிதி மாநில அளவில், ஒற்றைச் சாளர வங்கிக் கணக்கில் (SINGLE NODAL ACCOUNT) செலுத்தப்படும். மாவட்ட நிர்வாகம் வங்கிக் கணக்கில் இருந்து திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு அல்லது அலுவலர்களுக்கு நிதியை விடுவிக்கும்.

ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில், முன்னுரிமைப் பணிகளைக் கட்டாயமாக எடுத்துச் செய்வதற்கென, ஒரு குறிப்பிட்ட தொகையை ‘வரையறுக்கப்பட்ட கூறு நிதி’ (Tied Component) எனவும், மீதமுள்ள தொகையினை ‘வரையறுக்கப்படாத கூறு நிதி’ (Un-Tied Component) எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வகைப்படுத்தப்படாத கூறு நிதித் தலைப்பில், குறிப்பிட்ட சில தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம்பெறாத, எந்தப் பணியையும் சட்டமன்ற உறுப்பினர், அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில், தேர்வு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், குறைந்தபட்சம் 22 சதவிகிதத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் பகுதிகளில் (அல்லது) நகர்ப்புறப் பகுதிகளில் குடிசைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, கட்டாயம் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் அவ்வப்போதைய தேவை மற்றும் அவசிய நிலைப்பாட்டின் அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகளை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வெளியிட்டு வருகிறார்.

### மேற்கொள்ளப்படும் பணிகள்

கப்பிக் கல் சாலைகளைத் தார்ச் சாலையாக மேம்படுத்துதல், மிகவும் பழுதடைந்துள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல், தேவையின் அடிப்படையில் தார்ச் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி, தார்ச் சாலைகளை முறைப்படுத்துதல், சிமென்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல். அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டடம், சுற்றுச் சுவர் கட்டிக் கொடுத்தல் போன்ற பணிகளை, இந்த நிதியில் இருந்து செய்யலாம்.

**மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியின் நலனை மேம்படுத்த கலைஞர் தீட்டிய தொலைநோக்குத் திட்டம் வளர்ந்து செழித்திருக்கிறது. அதில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியும் செழுமையடைகிறது.**

அதேபோல அரசுப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசினர் தங்கும் விடுதிகள், மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுத்தலுக்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.



சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், புதிய பொது பூங்காக்கள் உருவாக்குவது, பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல், ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்கள் வாங்குதல் உள்ளிட்ட பணிகளும் இந்நிதியில் இருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

### உயர்த்தப்பட்ட நிதி

1997-1998 நிதியாண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் அவ்வப்போது திட்டத்திற்கான நிதி உயர்த்தி வழங்கப்பட்டு வரப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி 1997-1998-ஆம் நிதியாண்டில் 25 இலட்சம் ரூபாயாக இருந்தது.1998-1999 நிதியாண்டில் 35 இலட்சம் ரூபாய்,1999-2000-வது நிதியாண்டில் 50 இலட்சம் ரூபாயாகவும், 2000-2001-ஆம் நிதியாண்டில் 77 இலட்சம் ரூபாயாகவும், 2001-2002-நிதியாண்டில் 82 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

2005-2006 நிதியாண்டில் 1 கோடி ரூபாயாகவும், 2006-2007 நிதியாண்டில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாகவும், 2008-2009 நிதியாண்டில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாயாகவும், 2009-2010 நிதியாண்டில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாயாகவும், 2010-2011-இல் 1 கோடியே 75 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. 2011-2012 நிதியாண்டு முதல் 2016-2017 நிதியாண்டு வரை 2 கோடி ரூபாயாகவும், 2017-2018 நிதியாண்டு முதல் 2020-2021 வரை 2 கோடியே 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

2021-2022 நிதியாண்டு முதல் ரூபாய் சட்டமன்ற உறுப்பினருக்கான தொகுதி மேம்பாட்டு நிதியை 3 கோடி ரூபாயாக உயர்த்தி, ஒதுக்கீடு செய்து வருகிறது ‘திராவிட மாடல் அரசு’. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியின் நலனை மேம்படுத்த கலைஞர் தீட்டிய தொலைநோக்குத் திட்டம் வளர்ந்து செழித்திருக்கிறது. அதில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியும் செழுமையடைகிறது.

**...வலம் வருவோம்**

## நாடாளுமன்றக் கூட்டுக்குழுவைக் கேலி செய்யும் பா.ஜ.க.!

வக்பு வாரியத்திற்கு உட்பட்ட சொத்துகளை நிர்வகிக்க, பழைய (1995) சட்டத்தைத் திருத்தி, புதிய சட்டமொன்றை (2024) பா.ஜ.க. அரசு கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. அதன்படி, முஸ்லிம் அல்லாதவர்கள் இருவர், வக்பு வாரியத்தில் இடம்பெறலாம் என்ற ஒரு பிரிவு சொன்னது. இது தவிர பல்வேறு சட்டப்பிரிவுகள் ஆபத்தானவையாக இருந்தன. இவற்றை அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அப்போதே எதிர்த்தனர்.

நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு வக்பு சட்ட முன்வரைவை அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை எழுப்பினர். அதன்படி, நாடாளுமன்றக் கூட்டுக்குழு அமைக்கப்பட்டது. அதன் தலைவராக பா.ஜ.க.-வின் ஜெகதாம்பிகா பால் நியமிக்கப்பட்டார். தி.மு.க.வின் ஆ.ராசா, எம்.எம்.அப்துல்லா உள்ளிட்ட 21 மக்களவை உறுப்பினர்கள், 10 மாநிலங்களவை உறுப்பினர்கள் என மொத்தம் 31 உறுப்பினர்கள் (தலைவரையும் சேர்த்து) அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

ஆனால், அந்தக் குழுவின் ஆய்வுகள் நேர்மையாகவும் சட்டப்படியும் நடக்கவில்லை எனக் குழுவில் இடம்பெற்றுள்ள எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குற்றஞ்சாட்டினர். குறிப்பாக, வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை அவசர அவசரமாக ஆய்வு செய்வதை ஏற்காத, தி.மு.க. உறுப்பினர்கள் ஆ.ராசா, எம்.எம்.அப்துல்லா உள்ளிட்ட 10 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரு நாள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மீண்டும் கூடிய நாடாளுமன்றக் கூட்டுக் குழு, வக்பு வாரிய சட்டத் திருத்தத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்த ஒரு திருத்தத்தைக் கூட ஏற்காமல், பா.ஜ.க. உறுப்பினர்கள் முன்வைத்த திருத்தங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு, சட்டத் திருத்தத்துக்கு அனுமதி அளித்துள்ளது.

அதுமட்டுமல்ல; 2024-இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட சட்ட முன்வடிவில், 2 முஸ்லிம் அல்லாதவர்கள் வக்பு வாரியத்தில் இடம்பெறலாம் என்று கூறப்பட்டிருந்தது. இப்போது அந்த எண்ணிக்கை 4-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோன்று இன்னும் பல மோசமான திருத்தங்கள். ஆரம்பகட்ட சட்ட முன்வரைவை விட, நாடாளுமன்றக் கூட்டுக்குழு தயாரிக்கும் முன்வரைவு, இன்னும் ஆபத்தானதாக இருக்கப்போகிறது.

‘நாடாளுமன்றக் கூட்டுக்குழுவில் நியாயம் கிடைக்கும் என்றால், இப்போது அந்தக் குழுவையும் கேலிக்கூத்தாக்கி உள்ளது பா.ஜ.க.

-சு.விஜயபாஸ்கர் முகநூல் பதிவு

## :.ப்ளாஷ்பேக்



### பேராசிரியர் வீட்டு நூலகத்தில்...



எம்.எஸ்.மணிகண்டன்

19-11-2014 அன்று என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு, கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களை, அவருடைய இல்லத்தில் சந்தித்தேன். வீட்டு நூலகத்தில் இருந்த அவர், நான் உள்ளே நுழைந்ததும், என்னைப் பற்றி கேட்டறிந்து, வாழ்த்தினார். வாழ்த்தைப் பெற்றுக்கொண்டு, அவருடன் புகைப்படம் ஒன்றையும் எடுத்துக் கொண்டேன்.

**- எம்.எஸ்.மணிகண்டன்,**
**சோழவரம் தெற்கு ஒன்றியம், சென்னை வடகிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### வெற்றிக்குழந்தை!

29.06.1963 அன்று திருவண்ணாமலைத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்ட ப.உ.சண்முகம் வெற்றிபெற்றார். தேர்தல் முடிவு வெளியான நாளில்தான், அண்ணா தனது வளர்ப்பு மகன்கள் பரிமளம், இளங்கோ இருவருக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதால், இரட்டிப்பு மகிழ்ச்சியில் இருந்தார். அதன்பின்னர் அண்ணா, கலைஞர் பங்கேற்ற வெற்றி விழா திருவண்ணாமலையில் நடைபெற்றது. ‘திருவண்ணாமலை வெற்றிக் குழந்தை’ என அந்த வெற்றியை வர்ணித்தார் கலைஞர்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

734

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.